17th March 1956]

Sri M. PALANIYANDI : ரத்னசபாபதி முதலியார் கமிட்டியின் ரிபோர்ட் பரிசீலனையில் இருப்பதாகவும், அதிலுள்ள சிபார்சுகளில் இன்னும் சிலவற்றை அமுலுக்குக் கொண்டுவரவேண்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதுவரைக்கும் முனிசிபல் தொழிலாளிகளுடைய ஸர்விஸ் ப்ரொவின்ஷியலைஸ் செய்யப்படாமலே இருக்குமென்று நினைக்கிறேன். ஆகவே, உடனடியாக முனிசிபாலிடிகளில் வேலை செய்யும் தோட்டி போன்ற தொழிலாளிகள் விஷயத்தை அவர்கள் எழுப்பும் குறையை தொழில் கோர்ட்டுக்கு விடவேண்டுமென்று கேட்டால் அரசாங்கம் மறுக்கிறது. அவர்களுடைய கோரிக்கை தொழில் கோர்ட்டுக்கு விடப்பட்டு, அவர்களுடைய குறை தீர்க்கப்படுமா ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : I will consider it.

Sri V. BALAKRISHNAN : முனிசிபல் நிர்வாகத்தில் கீழ்த்தர சிப்பந்திகள் அத்தியாவசியமாக இருப்பதால், அவர்களுடைய முக்கியத்துவத்தைக் கருதி சர்க்காருடைய அபிவிருத்தித் திட்டத்தில் அவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படுமா ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : இருக்கிற திட்டங்களை நிறைவேற்றின பிறகு மற்ற திட்டங்களும் கவனிக்கப்படும்.

Markets for handloom products

* 3440 Q.—Sri A. M. RATHNASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether this Government have deputed any of its officials to go to foreign countries to find markets for handloom products of this State;

(*b*) if so, how many of them have been sent so far for the last two years;

(*c*) the names of the countries to which these officials have been sent;

(*d*) total expenditure by this Government on this account; and

(*e*) whether the Central Government have shared any portion of the expenditure?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) *to* (*e*) Do not arise.

Sri M. PALANIYANDI : மேல் நாடுகளிலெல்லாம் கைத்தறித் துணியைப் பிரசாரம் செய்வதற்கு பல கடைகள் திறக்கப்பட்டும், அதிகாரிகள் அங்கு அனுப்பப்பட்டும் வருகிறார்கள். தென்னாட்டிலும் அதிக கைத்தறித் துணி தயாரிக்கப்படுவதால், அந்தச் சரக்குகளையும் மேல் நாடுகளில் பிரபலப் படுத்த, மேல் நாடுகளில் கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்வதோடுகூட, தமிழ்நாட்டிலிருந்து முக்கியஸ்தர்களை அங்கு அனுப்பி காரியங்களைச் செய்வதற்கு அாசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதெல்லாம் கவனிக்கப்பட்டு செய்யப்பட்டுதான் வருகிறது. மேனாட்டிலே கைத்தறித் துணிகளைப் பிரபலப்படுத்தவேண்டியது மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அகில-இந்திய கைத்தறி போர்டார் மேல்நாடுகளில் மார்க்கெட்டுகளை

[17th March 1956

ஏற்படுத்த மத்திய அரசாங்கம் அனுமதித்திருக்கிறார்கள். அதன்படியே மத்திய கிழக்கு, தென் கிழக்கு ஆசியப் பிரதேசங்களில் மார்கெட்டுகளை வைப்பதற்கு மத்திய சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள். சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக அகில-இந்திய கைத்தறி போர்டார் மார்க்கெட்டிங் ஆபீசர்களை பாக்தாத், ரங்கூன், சிங்கப்பூர், கொழும்பு போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. விற்பனைக்கான எம்போரியங்கள் கராச்சி, ஈடன், சிங்கப்பூர் போன்ற சில இடங்களிலே அமைக்கப்பட்டிருககின்றன. அங்கெல்லாம் விற்கப்படுவது சென்னை ராஜ்யத்திலே உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகள்தான்.

SRI V. R. NAGARAJAN : May I know what percentage of handloom goods produced in this State is being used in Government offices as part of their stationery?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I have no information.

SRI S. DAIVASIGAMONEY : Do not the Government think that it will be better to entrust the work of pushing the sale of handloom goods in foreign countries to experts who are sent from our State than to leave the matter in the hands of High Commissioners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is also taken into account when this Government depute officers to organize markets for these goods.

SRI M. PALANIYANDI : காஞ்சீபுரம், கொள்ளேகாலம் போன்ற இடங்களிலே தயாரிக்கப்படும் வர்ணஜாலப் பட்டுப் புடவைகளுக்கு அமெரிக்கா போன்ற இடங்களிலே நல்ல கிராக்கியும் மோகமும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்தச் சரக்குகளை அங்கு அதிகமாக அனுப்பி விற்பனை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றியும் கவனிக்கப்பட்டுதான் வருகிறது.

SRI A. M. RATHNASWAMY : Is it not a fact that in countries like America there is a growing demand for handloom goods? Is it not a fact that Mr. Sabanayakam has been deputed by our Government to proceed to foreign countries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Sabanayakam is an officer of the Government of India and he has not been deputed exactly for the purpose referred to by the hon. Member but he has been deputed to attend the exhibition at Lepsig Fair where our handloom products are to be exhibited on a grand scale.

SRI M. JAGANNATHAN : May I know whether our Government will consider the desirability to depute some of our officials to go to foreign countries as marketing officers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. Some of our officers have been deputed to these centres as marketing officers.

17th March 1956]

SRI B. K. NALLASWAMI : As there is much scope for the export of artistically designed handloom carpets, will the Government come forward to recommend to the Central Government to make arrangements for sending samples of these goods also to other countries for advertisement purposes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Whatever demand is there or is likely to be organised in other countries for all types of our handloom goods, all those demands will be taken into consideration before the Government take steps to export them.

SRI V. BALAKRISHNAN : May I know whether the Hon. Minister is aware of the fact that the marketing depot in Colombo is not doing sufficient propaganda to propagate our handloom goods in the tea plantation areas where the bulk of Indian population live and will the Hon. Minister take steps to arrange for some attractive propaganda among this population of Ceylon in the tea estates?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Of course, these officers are not expected to go out and carry on propaganda as suggested by the hon. Member. But anyhow if the hon. Member would give some specific suggestion arising out of his own personal experience the Government will certainly go into them.

SRI G. GOVINDAN : நம் ராஜ்யத்தில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் விற்பனைக்கு வெளி நாடுகளை எதிர் பார்ப்பதைக்காட்டிலும், பாதி விலைக்கு அவைகளை கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : துணியை பாதி விலைக்குக் குறைத்துக் கொடுத்துவிட்டால், இன்னொரு பாதிப் பணத்திற்கு எங்கே போவது ? கைத்தறி துணி இங்கேயே செலவாகவேண்டுமென்று அங்கத்தினர் கருதினால் இந்த ராஜ்யத்திலுள்ள எல்லோரும் கைத்தறி துணியையே கட்டவேண்டும். முக்கியமாக, கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் கைத்தறித் துணியைத்தவிர வேறு எதையும் கட்டுவதில்லை என்ற முறையில் வழி காட்டினால்கூட நலமாக இருக்கும். அத்துடன் திருப்தியடைந்துவிட முடியாது. அந்நிய நாடுகளிலும் வசீகரமான துணிகளை விற்பனை செய்து அங்கு விரிவுபடுத்துவதுதான் நலம்.

SRI G. GOVINDAN : கைத்தறித் துணியை பாதி விலைக்கு கெஜட் பதிவில்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றால் மறு பாதிச் செலவை சர்க்காரே கொடுத்து ஈடு செய்யவேண்டும். அதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வாங்கி உடுத்துபவர்களுக்கு நன்றாக இருக்கும். ஆனால், சர்க்காருக்கு நன்றாக இருக்காது.

SRI K. V. RAMASWAMI : நம்முடைய மாகாணத்தில் உற்பத்தி 9–30
யாகும் கைத்தறித் துணியாகிய லுங்கிகளுக்கும், கைகுட்டைகளுக்கும் வெளி p.m.
மாகாணங்களில் அதிக கிராக்கியும் மதிப்பும் இருப்பதனால் வெளி மாகாண சர்க்காரோடு நம்முடைய சர்க்கார் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு பேச்சு வார்த்தை நடத்த முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதையெல்லாம் மத்திய சர்க்கார் கவனித்துக்கொண்டுதான் வருகிறது.

[17th March 1956

Sri K. KUNHI MOHAMED SHAFEE: Sir, the Hon. Minister was pleased to state that certain of our officers were deputed to foreign countries for finding markets for handloom products. May I know for what products markets are to be found by them in foreign countries and which are all the countries the officers have been deputed to?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: About the varieties of cloth that are sought to be popularised, I would like to have notice.

Sri S. DAIVASIGAMONEY: We have often heard the Hon. Minister say that Khadi is also a handloom product. May I know if Khadi is also exported to foreign countries and sale of it is being pushed there?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Khadi is not produced to that large extent as non-khadi handloom cloth. Still, I can tell the hon. Member that even in other countries, Khadi is quite attractive, and popular.

Sri S. THINAKARASAMI THEVAR: கைத்தறிகளில் சிலர் டிசைன்களுக்கு கிராக்கியும், பிரியமும் வெளி நாடுகளில் இருக்கின்றன. ஆனது பற்றி அம்மாதிரி பிரியப்படும்படியான டிசைன்களின் ஜாப்தா ஒன்றை தயாரித்து அந்த டிசைன்களில் அதிகப்படியான கவனம் செலுத்தி அவைகளை வெளி நாட்டிற்கு எற்றுமதி செய்வதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அப்படியேதான் செய்யப்பட்டு வருகிறது.

Sri M. JAGANNATHAN: With a view to increase the output of handloom products in our State, may I know whether this Government will come forward to start more number of co-operative societies for the benefit of the handloom weavers and may I know whether they have got any scheme in the Second Five-Year Plan to meet this demand?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, it is only 25 per cent of the handlooms that have been brought under the co-operative societies; but under the Second Five-Year Plan, it is our objective that we should raise it to at least 50 per cent.

Sri K. VINAYAKAM: கைத்தறி துணிகளை வெளி நாட்டிற்கு விற்பனைக்கு அனுப்பி அதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்குவதற்கு உள்நாட்டிலிருப்பவர்கள் அதை ஆதரிக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். குறிப்பாக சட்டசபையிலுள்ள அங்கத்தினர்கள் கைத்தறித் துணியைக் கட்டவேண்டும் என்றும் சொன்னார். எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் சிலர் கட்டுகிறார்கள், ஆனால் காங்கிரஸ் கட்சியிலிருப்பவர்கள் சிலர் கட்டுவது இல்லை, குறிப்பாக கனம் ராஜா முத்தைய்யா செட்டியார் கட்டுவதில்லை. அவரை கட்டும்படியாக செய்துவிட்டு அதன்பிறகு எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எல்லோரும் கைத்தறி துணியைக் கட்டி அதன்மேல் வெளி நாட்டிற்கு விற்பனைக்கு அனுப்ப எறபாடு செய்வது அவசியம் என்று சொல்லவில்லை. இங்கே எல்லோரும் கட்டவேண்டும். அதற்கெல்லாம் உற்பத்தி செய்துவிட்டு அதன் பிறகு வெளி

17th March 1956]

நாடுகளுக்கு அனுப்பவேண்டும். நான் எதிர் கட்சி அங்கத்தினர்கள் மட்டும் கட்டவேண்டும் என்று சொல்லவில்லை. இந்த சட்டசபையிலுள்ளவர்கள் எல்லோரும்தான் கட்டவேண்டும் என்று சொல்லுகிறேன்.

SRI A. M. RATHNASWAMY: Is it a fact, Sir, that a certain variety called the Madras Handkerchiefs is in very great demand in certain parts of Africa—East Africa—and if so, what are the steps taken by the Government to give encouragement to this particular variety?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This variety of Madras Handkerchiefs is not at all consumed within the country; we have to depend on foreign markets. All possible steps are being taken to organise sales in the other countries. Still, I would like to tell the hon. Member that we cannot absolutely rely on the consumption in foreign countries of these varieties. I want the handlooms to produce more and more varieties which are in demand in this country.

SRI P. CHELLATHURAI: கைத்தறி ஆடைகளையும், கதர் ஆடைகளையும் இந்நாட்டிலுள்ள ஆடவர், பெண்டிர் எல்லோரும் அணிதல் வேண்டும் என்ற ஒரு சட்டத்தை இயற்றுவது சாத்தியமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சட்டங்கள் இயற்றுவதற்கும், கண்ட்ரோல்களை வைப்பதற்கும் ஓர் அளவு உண்டு. அதனால் சட்டம் இயற்றி பலன் இல்லை. மக்களுடைய மனம் மாறவேண்டும்.

SRI V. BALAKRISHNAN: On a point of order, Sir. The other day when the question on Family Planning came up and when I made a comparative reference to the fertility of an hon. Member of this House, the Hon. Speaker was pleased to rule out that no reference should be made to hon. Members of this House. Just a little while ago, my hon. Friend on my right made a pointed reference to the Raja of Chettinad in the Congress Party and his inability to wear khaddar. How does the Hon. Speaker allow this personal pointed reference and how did he rule out my reference which was only comparative and never pointed.

MR. SPEAKER: The references pointed out by the hon. Member relate entirely to different matters—one relates to the personal fertility of a person and the other relates to the garment which he wears. I suppose the hon. Member realises the difference between the two—one is too personal and the other is with reference to the clothes which a man wears. Therefore, this reference is perfectly in order.

SRI A. GOVINDASAMY NAYAGAR: கைத்தறி வாரம் என்று கொண்டாடப்படுவதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அப்பொழுது எல்லோரையும் கைத்தறி துணியை உடுத்தவேண்டும் என்று வற்புறுத்தவேண்டும் என்றும் சொல்லி வருகிறார்கள். அத்துடன் அரசாங்கம் தங்களுடைய சிப்பந்திகளுக்கு கதர் ஆடை வழங்கி வருகிறார்கள். அவர்களுக்கு கைத்தறித் துணியை வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எதிர் கட்சித் அங்கத்தினர்கள் உள்பட கதரும் கைத்தறி துணி என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கேள்வி கேட்ட கனம் அங்கத்தினருக்கு அது இன்னும் புரியவில்லை. கதர்த் துணிகூட கையினுல் தறியில் நெய்யப்படுகிறது என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்லுகிறேன்.

Sri K. R. VISWANATHAN : Sir, during the period of War as well as long afterwards, there was a tendency on the part of handloom producers not to keep up the standard of products for export. Have the Government taken precautions to see that this lowering of standards of products for export are prevented at this end as well as at the end in foreign markets?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do appreciate that there is need to emphasis keeping up and improving of the standards and it is for that purpose, we encourage handlooms to get into the co-operative societies so that through the co-operative societies we may endeavour to keep up standards and improve standards.

Sri K. V. RAMASWAMY : இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் அனைவரும் கைத்தறித் துணிகளை அணிந்து, அதை ஆதரிக்கவேண்டும் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னுர். அதை கிரியாம்சையில் கொண்டுவருவதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு கைத்தறித் துணியை குறைந்தபட்சம் பாதி விலைக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பு கேள்வி கேட்ட கனம் அங்கத்தினர் குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்குப் பரிந்து பேசினுர், அதை விட்டுவிட்டு கனம் அங்கத்தினர் இப்பொழுது தங்களுக்கு மட்டும் குறைந்த பட்சத்தில் பாதி விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிருர். அது முறையல்ல என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri N. RAMAKRISHNA AYYAR : Among handloom fabrics, the Madras Handkerchiefs are being exported to African countries. But the export is confined to only private enterprise, so much so there is lot of exploitation of the poor handloom weavers by these exporters. Will the Government consider the feasibility of having co-operative institutions to do this export business?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, the Government have been examining this aspect of the question also.

Sri P. CHELLATHURAI : கனம் மந்திரி அவர்கள் எனது கேள்விக்கு பதில் சொல்லும்போது சட்டம் இயற்றுவதற்கும் கட்டுப்பாடு செய்வதற்கும் ஒருவரம்பு உண்டு என்று சொன்னுர்கள். நமது மாகாணத்தில் ஒரு மனைவி இருக்கும்போது இரண்டாவது மனைவியை கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது என்று சட்டம் இயற்றியிருக்கிருர்கள். அதைப்போலவே இப்பொழுது நம் நாட்டில் எவ்வளவோ அழகான வேலைப்பாடுடனும், திறனுகவும் ஆடைகளை நெய்கிருர்கள். அதை வாங்கி அணிவதற்கு சட்டம் இயற்றினுல் என்ன என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டு மனைவிகளை கலியாணம செய்துக்கொள்வது என்பது வரம்புக்குட்பட்டது. கைத்தறி துணியை வாங்கிக்கொண்டு கட்டவேண்டும் என்று சட்டம் இயற்றுவது வரம்புக்கு உட்படாதது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

17th March 1956]

Sri M. PALANIYANDI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 சத விகிதம் கைத்தறியை கூட்டுறவு முறையில் கொண்டுவரப்போவதாகச் சொன்னார். அப்படி கூட்டுறவு முறை வந்தும்கூட கூலி பற்றாது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள மந்திரி, தொழில் மந்திரியாகவும் இண்டஸ்ட்ரீஸ் மந்திரியாகவும் இருப்பதால் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி நூல் விலையை குறைப்பதற்கு வழி வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாக எவ்வளவு சாத்தியப்படுமோ அவ்வளவெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி கனம் அங்கத்தினருக்கு நேரடியாகத் தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கிறது. அது அவர்களுக்குப் போதாது என்றும் தெரியும். நூல் விலையை உயர்த்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

Sri A. GOVINDASWAMY NAYAGAR : கைத்தறி வாரத்தை பிப்ரவரி மாதத்தில் கொண்டாடுகிறார்கள். பொங்கல் பண்டிகையின்போது அதாவது ஜனவரி மாதத்தில் இந்தக் கைத்தறி வாரத்தைக் கொண்டாடுவதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அகில இந்தியாவுக்கு மாக ஒரு வாரத்தை பொதுவாகதற்போது கொண்டாடுகிறார்கள். அதோடு பொங்கல் வாரத்திலும் நாம் கொண்டாடலாம். அதேமாதிரியாக எல்லோரையும் கொண்டாடச்செய்யலாம். இதை சர்க்காரும் யோசித்துக்கொண்டிருக் கிறது.

Sri A. RATNAM : எடின்பரோவுக்கு கைகுட்டைகள் அதிகம் ஏற்றுமதி ஆகிறது. கைகுட்டைகளைத் தயாரிப்பவர்கள் யார் ? எந்த முதலாளி இதனை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார் ? தற்போது செய்யப் படும் கைக்குட்டைகளின் ரகத்தையும், எண்ணத்தையும், கவர்ச்சியையும் அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்திருக்கிற எல்லோருக்கும் இது சம்பந்தமான என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படவேண்டுமோ அவை யாவும் கொடுக்கப்படும். கைக்குட்டைகளை யார் தயாரிக்கிறார்கள் ? எந்த முதலாளி ஏற்றுமதி செய்கிறார் என்பதற் கான தகவல்கள் என்னிடம் இல்லை.

Sri A. M. RATHNASWAMY : Sir, is it a fact that one of the reasons why Indian Handloom goods are not able to get a good foreign market in other countries is the low standard of quality and may I know what are the steps taken by the Government to improve the quality of the Indian Handlooms so that they may be in a position to compete with foreign textiles like Japan textiles?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I can tell the hon. Member that our standards are definitely improving and the prospects of our market are also improving.

Sri G. GOVINDAN : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது யாரையும் கண்டிப்பாக கைத்தறி துணி தான் உடுத்திக்கொள்ள வேண்டுமென்று கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டு வர முடியாது என்று சொன்னார்கள். கைத்தறி ஆடைகளை உற்பத்தி செய்கிறவர்கள் மில் துணியை உடுக்கிறார்களே, அவர்களாவது கைத்தறி துணியைத்தான் உடுக்கவேண்டுமென்று கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா ?

[17th March 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களையும் கட்டுப்படுத்துவது முடியாத காரியம். அவர்கள் எல்லோரும் இதனை உணர்ந்து தாங்களாகவே மனம் மாறி கதர் உடுத்த முன் வரவேண்டும்.

SRI S. RAMALINGAM : கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவியை அளிப்பதற்காக கரைப்போட்ட புடவை, வேஷ்டி முதலியவற்றை மில்லில் உற்பத்தி செய்யக்கூடாது எனத் தடை விதிக்க மத்திய அரசாங்கத்திற்கு நம் அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவை யாவையும் இந்தச் சர்க்கார் எடுத்திருக்கிறது. மில் துணி இல்லை என்பதினால் இந்தப் பிரச்னை தீராது.

SRI S. DAIVASIGAMONEY : The Hon. Minister was pleased to exhort all the Members of this House to wear handloom goods. We are thankful for the suggestion. May I put a counter-suggestion that at least in future the Hon. Ministers instead of wearing khadi as the hall-mark of the Congress may wear handloom clothes.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am again repeating to the hon. Member for his edification that Khadar is handloom cloth and it is the same handloom weavers that produce the khadi cloth.

SRI V. BALAKRISHNAN : வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பெண்களுக்கான கைக்குட்டைகளுக்கு அதிகக்கிராக்கி இருக்கிறது எனத்தெரிவதால், அதன் ரகத்தை அதிகமாக்கி, அழகை அதிகப் படுத்தி, கவர்ச்சிமிக்கதாக்கி, விலையையும் குறைத்து, மார்க்கெட்டை விஸ்தரிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள் என்பது தெரிய வருகிறது. இதைப்பற்றி எல்லாம் எவ்வளவு விரிவாக எழுத முடியுமோ அவ்வளவு விரிவாக எனக்கு எழுதி அனுப்பினால் நான் அவற்றைக் கவனிக்கலாம்.

SRI P. SELVARAJ : Sir, may I know from the Hon. Minister whether in bulk supplies to foreign markets, the quality is the same as the sample shown?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I should think so.

SRI V. R. NAGARAJAN : As some of the hon. Members are very keen to wear handloom products, will the Government, while catering to their tastes, take steps to produce fashionable and glamorous neck ties so that they may be useful for particular Members?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If hon. Members would kindly give me particulars about their requirements and tastes, I shall certainly look into the matter and see that these varieties are produced and made available to them.

SRI A. GOVINDASAMY NAYAGAR : கைத்தறிக்கும், கதருக்கும் வித்தியாசம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் அப்படியானால் அவர் என் கைத்தறித் துணியை உடுக்காமல் கதர் உடுக்கிறார்கள்.

17th March 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கதர் கைத்தறித் துணியாதலால் நாங்கள் கதர் துணியை உடுப்பதினால் பல்லாயிரக்கணககான கைத்தறியாளர்களுக்குப் பிழைப்புக் கிடைக்கிறது. மேலும் கதர் துணியில் உபயோகிக்கபபடும் நூல் ஆலையில் நூற்றது அல்ல. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் வீடுகளில் தங்கி நூற்கின்ற நூல். இதையே தங்கள் பிழைப்பாகக்கொண்டு நூல் நூற்றுவருகிறார்கள். கைத்தறித் துணியை நாங்கள் உடுத்தால், கைத்தறியாளர்களுக்குப் பிழைப்பு ஏற்படும். ஆனால் நூல் நூற்கினறவர்கள் வேலை இல்லாமல் பிச்சை எடுக்கும்படி நேரிடும். ஆகவேதான் நாங்கள் கதர் உடுக்கின்றோம். கதர் உடுப்பதினால் முதலில் நூல் நூற்கின்றவர்களுக்குப் பிழைப்புக் கிடைக்கிறது. கைத்தறியாளர்களுக்குப் பிழைபபுக் கிடைக்கிறது.

SRI S. PANCHAKSHARAM : Will the Hon. Minister be pleased to state what is the total value of the handloom fabrics produced in this State, what percentage of it is being exported to outside countries and what is the value of the dollars that this trade has earned for the Government of India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir.

MR. SPEAKER : I think we have had a sufficient number of questions. For the last twenty minutes we have been having questions on this subject. Now, question time is over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1956–57—*cont.*

(1) DEMAND XXVII—ELECTRICITY
AND
(2) DEMAND XLI—CAPITAL OUTLAY ON ELECTRICITY SCHEMES.

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 14,36,80,400 under Demand XXVII—Electricity."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 14,36,80,400 under Demand XXVII—Electricity."

SRI N. RATHNA GOUNDER : Sir, I beg to move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 14,36,80,400 under Demand XXVII—Electricity be reduced by Rs. 100."

MR. SPEAKER : Motion moved—

"That the allotment of Rs. 14,36,80,400 under Demand XXVII—Electricity be reduced by Rs. 100."

A—3